# DEPOSITION OF WITNESS

(Chapter XXII code of CRIMINAL Procedure)

## THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PADMANABHAPURAM

| | |
|---|---|
| Calender Case No. | : C.C. 194/2020 |
| Deposition of Witness for Prosecution | : P.W. 5 (L.W.9 ) |
| Name | : Prema |
| Husband Name | : Stalin |
| Village | : Uvari |
| Taluk | : Radhapuram |
| Calling | : Inspector |
| Religion | : Christain |
| Caste | : -- |
| Age | : 49 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.07.2023

**( எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு-317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது )**

**முதல் விசாரணை-**

1. நான் தற்போது உவரி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு தக்கலை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகவும் கொற்றிகோடு காவல் நியலையத்தில் பொறுப்பு உதவி ஆய்வாளராகவும் பணிபுரிந்தேன். கடந்த 29.08.2018 ம் தேதி 18.00 கொற்றிகோடு காவல் நிலையத்தில் தலைமை காவலர் தினகர்ராஜ் நிலைய பொறுப்பில் இருந்த போது வாதி சாம்ராஜ் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார மனுவை பரிசீலனை செய்து கொற்றிகோடு காவல்நிலைய கு.எண். 107/2018 இதச 279, 337 பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4** ஆகும். பின்னர் முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

2. பின்னர் வழக்கு கோப்புகளை புலன் விசாரணைக்காக 30.08.2018 ம் தேதி காலை 07.00 என் வசம் ஒப்படைத்தார் நான் மேற்படி வழக்கு கோப்புகளை என்னுடைய புலன் விசாரணைக்கு

எடுத்துக்கொண்டு சம்பவ இடம் 30.08.2018 ம் தேதி காலை 07.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கிங்ஸ்லி மற்றும் ராபர்ட்சிங் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன் **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5** ஆகும். பின்னர் அவர்களையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3. பின்னர் சாட்சிகள் சாம்ராஜ், சாக்சன் என்பவர்களை தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் தினகர்ராஜ் என்பவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட நபர் நிஜின் தாலி என்பவர் 14.09.2018 ம் தேதி சிகிட்சை பலனளிக்காமல் வழக்கின் சட்டப்பிரிவுகளை இதச 279, 337 பிரிவுகளிலிருந்து இதச பிரிவு 279, 337, 304(A) பிரிவுகளாக மாறுதல் செய்து அந்த அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த **பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.6** ஆகும். பின்னர் இவ்வழக்கின் கோப்புகளை மேல்விசாரணைக்காக தக்கலை காவல் ஆய்வாளர் அருள்பிராகஷ் அவர்களிடம் ஒப்படைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்குவிசாரணை**

**1.** அ.சா. சேம்ராஜ் உங்களுடைய விசாரணையில் அவரது வீட்டிற்கு முன் சாலையில் விபத்து நடைபெற்றதாகவும் மற்றும் அவரது வாகனம் முன்நோக்கி நகர்ந்து சுவரில் மோதி முன்பகுதி சேதம் அடைந்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். மாதிரிவரைபடத்தில் சம்பவ இடமாக தனிஸ் டிரேடர்ஸ் குடோன் முன்பு காட்டியுள்ளேன் என்றால் சரிதான். அ.சா.1 ன் வீடு மாதிரிவரைபடத்தில் ரோட்டை தொட்டு காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். அ'சா.1 ன் வீடு மளிகைகடையுடன் சேரந்து உள்ளது. என்னுடைய விசாரணையில் வீட்டின் முன் என்று தான் குறிப்பிட்டுள்ளார். சேதாரம் அடைந்த மதில் சுவரை மாதிரிவரைபடத்தில் காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். விபத்தை ஏற்படுத்திய வாகனம் எந்த திசையில் நின்றது மற்றும் சேதாரம் அடைந்த பொருட்கள் மற்றும் விபரங்கள் எதுவும் மாதிரிவரைபடத்தில் காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான்.

2. சம்பவமானது அதிகாலை 01.00 மணியளவில் நடைபெற்றது என்று சொன்னால் சரிதான். சம்பவத்தின் போது விபத்தை கன்னுற்ற சாட்சிகள் எந்த வெளிச்சத்தின் மூலம் பார்தார்கள் என்ற விபரத்தை விசாரணையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். சம்பபவ இடத்தில் சேதம்பட்ட கண்ணாடி துகள்களையோ, இரத்தம்பட்ட மண்ணையோ கைப்பற்றப்படவில்லை என்று

சொன்னால் சரியல்ல. விபத்திற்கு முழு காரணம் சாம்ராஜ் என்பவர்தான் என்றும்அவர் அவருடைய வாகனத்தை வேகமாக ஓட்டி வந்து திடீரென்று பிரேக் பிடித்ததால் தான் பினனால் வந்த வாகனம் அவர்மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றும் இந்த விபத்தானது அ.சா.1 ன் அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் சொல்லவது போல் சொன்ன இடத்தில் சொன்ன வித்தில் சமபவம் நடைபெறவில்லை என்றும் ஒருதலைபட்சமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியலல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

குற்றவியல் நடுவர் எண்.1,
பத்மநாபபுரம்